19th January 1965]

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அகில இந்திய அடிப்படையில் உள்ள இந்தக் கமிட்டி, ஸ்டடி டீம் தங்களுடைய ஆலோசனைகளைக் கூறிய பிறகு, அதன் பேரில் இம்மாதிரி மாநில அளவில் ஒரு குழு அமைப்பது அவசியமா, இல்லையா என்பது பற்றி மாநில அரசாங்கம் முடிவு எடுக்கும்.

வரதட்சிணைத் தடைச்சட்டம்

*13 **கேள்வி.—திரு. அ. பெ. தர்மலிங்கம் (திரு. மு. கருணாநிதி சார்பில்) :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வரதட்சிணை தடைச்சட்டத்தின்கீழ் 1963-ம் ஆண்டில் தமிழ் நாட்டில் தொடரப்பட்ட வழக்குகள் எத்தனை ?

(இ) அவற்றில் தண்டிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) வழக்கு ஏதும் தொடரப்படவில்லை.

(இ) இக் கேள்வி எழாது.

ஆயுள் கைதிகளின் குழந்தைகள்

*14 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிறைகளிலுள்ள ஆயுட் கைதிகளின் ஆதரவற்ற குழந்தைகளுக்குக் கல்வி வசதி அளிக்க சர்க்கார் என்ன ஏற்பாடுகள் செய்துள்ளது?

கனம் திரு. கோ. பூவராகன் : எல்லாக் குழந்தைகளுக்கும் இந்த ராஜ்ஜியத்தில் இலவசக் கல்வி வசதி அளிக்கப்பட்டுள்ளது. ஆயுட் கைதிகளின் குழந்தைகளுக்கென தனியாக எந்த வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை.

திரு. து. ப. அழகமுத்து : ஆயுள் கைதிகளின் குழந்தைகளில் சில பேர்கள் குற்றம் புரிந்த குழந்தைகளுக்காக நடத்தப்படும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு படிந்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அம்மாதிரி குற்றம் செய்த குழந்தைகளோடு இவர்களையும் சேர்த்து வைத்துப் படிக்கவைத்தால், இவர்களுக்கு அந்த சுபாவம் ஏற்பட்டுவிடும். ஆகவே, அந்தக் குழந்தைகளைத் தனியாக சர்க்கார்ப் பாதுகாப்பில் படிக்கவைக்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. கோ. பூவராகன் : அந்தக் குழந்தைகள் குற்றம் செய்திருந்தால் அவர்களையும் குற்றம் செய்த குழந்தைகளுக்காக உள்ள பள்ளிகளில் படிக்க வைப்பார்கள். தனியாக அவர்களுக்கென்று எந்த வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை.

திரு. ம. கமலநாதன் : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி வசதி அளிக்கப்பட்டுள்ளது. ஆகவே ஆயுள் கைதிகளின் குழந்தை